பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மாசி 27 | சனிக்கிழமை | 11.03.2023 | கதிர் 122

## எரிபொருள் விலைகள் குறையலாம்

டொலரின் பெறுமதிக்கு ஏற்றவாறு எதிர்வரும் நாட்களில் எரிபொருள் விலை குறைவடையும் என்று சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில விடயங்களில் ☞2

## சஜித் கண்டனம்!

அரசின் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் மற்றும் மிருகத்தனமான செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் மீண்டும் குரல் எழுப்பினார்.

'கொழும்பில் பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கண்ணீர்ப்புகைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது மிகவும் பாரதூரமான மற்றும் பரிதாபகரமான நிலை' - என்று எதிர்க்கட்சித் தலைவர் சபையில் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இது அரசின் வன்முறைத்தன்மையை வெளிப்படுத்துகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அடக்குமுறை தொடர்ந்தால் மக்கள் புரட்சி வெடிக்கும்

### பொதுச் சமூகம் ரணில் ஆட்சிக்கு எச்சரிக்கை





ஜனநாயக போராட்டங்களை அடக்குவதற்கு தொடர்ந்தும் இந்த ஆட்சி மிலேச்சத்தன மாக நடந்துகொண்டால் மக்கள் புரட்சிவெடிக்கும் என்று பொதுச் சமூகங்களின் பிரதிநிதிகள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய பின்னர் அவர்கள் இந்த எச்சரிக்கையை அரசுக்கு விடுத்தனர்.

கொழுமப்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவகத்திற்கு ☞2

## இது ரகசியம் அல்ல!

நான் நேற்றே சொன்னதைப்போல யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் தெரிவை கட்சிகள் எல்லாம் சேர்ந்து முடக்கி விட்டன. குறைந்தபட்சம் 9 நாட்களுக்குக்கூட ஒரு முதல்வரைச் சகித்துக்கொள்ளும் சகிப்புத்தன்மையை கட்சிகள் இழந்திருக்கின்றன. காரணம் உள்ளூராட்சி சபைத் தேர்தல். சொலமன் சிறிலுக்கு தனிப்பட்ட ரீதியில் யாரும் எதிர்ப்பில்லை. பாவம் அந்த மனுசனும் வயசான காலத்தில, அவரைக் கொண்டு வந்து முதல்வர் தெரிவுக்கு நிறுத்தி இப்படிக் கேவலப்படுத்துகிறாரக்ள். நீண்ட காலமாக அரசியலில் இருந்தாலும் தனக்கும் ஒரு பதவி தாவென்று கட்சிக்குள் சண்டைபிடித்த மனுசனல்ல அவர். ஒரு காலத்தில் தேர்தல்களில் விடுதலைப் புலிகளின் தெரிவாகவும் இருந்தவர். அதனால்தான் அவர் தெரிவு சம்பந்தப்பட்ட விடயத்தில் உள்ளே வந்து அவருக்கு எதிராகக் கைகளைத் தூக்குவதற்குப் பயந்து எல்லோரும் ஒளித்துக்கொண்டார்கள்.

நேற்றைய கூட்டத்திற்கு மணிவண்ணன் அணியினர் வரவில்லை. வி.நர்மதா, வை.கிருபாகரன், ம.அருள்குமரன், க.மொஹமட்நியாஸ், நீ.பாலச்சந்திரன், மு.முகமதுநிபாகிர், ஜெ.ரஜீவ்காந், இ.ஆனல்ட், கிறேசியன், சூ சிறில், நளினா, கணேசராசா, நீ.பிலிப் வி.மதிவதனி, விஜயதாட்சாயினி, நித்தியானந்தன், ரிஅஞ்சலா, ந.லோகதயாளன், சாந்தரூபன் ஆகிய 19 உறுப்பினர்கள் மட்டுமே சபா மண்டபத்திற்குள் அமர்ந்திருந்தனர். அதனால் நிறைவெண் (கோரம்) போதாது என்று தெரிவித்து கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது.

இதில் சில உறுப்பினர்கள் சபையில் என்ன நடக்கிறது என்று வேடிக்கை, விடுப்புப் பார்க்க வந்திருந்தனர். மணிவண்ணன் தரப்பு ஆட்கள் அவர்கள். பார்வையாளர் பகுதியில் அமர்ந்துகொண்டனர் விடுப்புப் பார்ப்பதற்கு வசதியாக. ஈபிடிபியினர் ☞8

## செல்வம் எம்.பி. கேட்ட கேள்வி

கொழும்பில் உள்ள பாக்கிஸ்தான் உயர் ஆணையரகம் கிழக்கு மாகாணத்தின் குறித்த ஒருபிரதேசத்தில் உள்ள ஆயிரம் பேருக்கு மட்டும் புலமை பரிசில்கள் வழங்குவதன் நோக்கம் என்ன? என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு ☞2

### தேர்தலுக்கான நிதியை விடுவிக்க
## ரணிலின் ஒப்புதல் கேட்டு கடிதம் அனுப்பி வைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தத் தேவையான நிதியை விடுவிக்கக் கோரும் கடிதம், நிதி அமைச்சரும் அரச தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவாவிற்கு, நிதி அமைச்சர் செயலாளர் அனுப்பியுள்ள எழுத்து மூலமான கடிதத்திலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய நிதியை விடுவிக்குமாறு கோரி தேர்தல்கள் ☞2

## மக்களை மிதித்து நசுக்கி வருகின்ற ராஜபக்ச நிழல் அரசை விரட்டுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறைகூவல்

'மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக இந்த மக்கள் விரோத ராஜபக்ச நிழல் அரசு மக்களை மிதித்து நசுக்குவதைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. இந்த அடக்குமுறை அரசை விரட்ட மக்கள் அணிதிரள வேண்டும்.'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

கொழும்பு, குணசிங்கபுர பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதாபிமானம் தெரியாத, மனிதநேயமற்ற மக்களின் வலியையும் வேதனைகளையும் புரிந்துகொள்ளாத உயர் வர்க்க ஆட்சியே தற்போது நாட்டில் செயற்படுகின்றது.

வரியை அதிகரித்து, வட்டி ☞2

### உள்ளூராட்சி வேட்பாளர்களான
## அரச அலுவலர்களுக்கு அடிப்படைச் சம்பளம்
### பரிந்துரைத்தது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான அரச உத்தியோகத்தர்களுக்கு மார்ச் 9ஆம் திகதி முதல் ஏப்ரல் 25ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய அடிப்படை சம்பளத்தை வழங்குவது பொருத்தமானது என்று தேர்தல்கள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. ☞8

## ஒரே நாள் இரவில் 350 மூடை நெல்லை கபளீகரம் செய்த காட்டு யானைகள்

### காரைதீவில் வெள்ளி அதிகாலை அதிர்ச்சி



அறுவடை செய்துவிட்டு வாகனத்தில் ஏற்றுவதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த 350 மூடை நெல்லை ஒரே இரவில் கபளீகரம் செய்து தீர்த்தன யானைகள்.

இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் காரைதீவில் வெள்ளிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேசத்தில் அமைந்துள்ளது வளைந்த வட்டை. அதன் மேல்கண்டத்திலுள்ள விஷ்ணு கோயிலுக்கு சொந்தமான 9 ஏக்கர் காணி உள்ளிட்ட 13 ஏக்கர் வயல் நிலத்தில் வியாழக்கிழமை அறுவடை இடம்பெற்றது. இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்ட நெல் மூடைகளாகக் கட்டப்பட்டு வயலோரமாக சேர்த்து வைக்கப்பட்டன.

அறுவடை முடிய இருட்டிவிட்டதனால் மறுநாள் வாகனத்தைக் கொண்டு வந்து மூடைகளை ஏற்றுவது என்று தீர்மானித்திருந்தனர். காலையில் வந்து பார்த்தால் நெல் ☞2

## திங்கள் பணிப் புறக்கணிப்பு மருத்துவர் சங்கம் அறிவிப்பு

### தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கை

இந்த ஆட்சியின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அடுத்த திங்கள்கிழமை முதல், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்தாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக்குழுக் கூட்டத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தினை முன்னெடுப்பதெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய, மார்ச் 15 காலை 8 மணி முதல், மேல், மத்திய, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் உள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும், தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறும்.

மார்ச் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல், வடக்கு, வடமத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் உள்ள வைத்திய சாலைகளிலும் ☞2

## காலாவதியான புகைக் குண்டுகள் பொலிஸ் பயன்பாட்டில் இருந்தன

### அவை குறித்து ஆய்வுகூட சோதனையும் இல்லை

இலங்கை பொலிஸ் சேவைக்கு கண்ணீர்ப்புகை குண்டுகளைக் கொள்வனவு செய்தபோது, அவற்றின் உள்ளடக்கம் தொடர்பில் இரசாயன ஆய்வுக்கூட பரிசோதனை மேற்கொள்ளப் படவில்லை என்று சமூகம் மற்றும் அமைதிக்கான மையக் குழு தெரிவித்துள்ளது.

கண்ணீர்ப்புகை குண்டுகள் தொடர்பில் குறித்த குழு மேற்கொண்ட ஆய்வில் இந்த இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குழுவின் ஆய்வில், 2022ஆம் ஆண்டில் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் 2000ஆம் ஆண்டு முதல் ☞2

## மாதகலில் 110 கிலோ கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், மாதகல் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 110 கிலோ கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.



அதை மறைத்து வைத்திருந்தவர்கள் ☞2

## மார்ச் 14 நள்ளிரவு முதல் ரயில் சேவை முடங்கும்

### அதுவரை கால அவகாசம் என்கிறது சங்கம்

தொடருந்து சேவைத் தொழிற்சங்கங்கள் மார்ச் 14 ஆம் திகதி நள்ளிரவு முதல் அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

உடனடியாகப் பணி புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கான இயலுமை தங்களின் தொழிற்சங்கத்துக்கு உள்ளது என்று ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் பி.விதானகே தெரிவித்தார். எனினும், அரசுக்குக் கால அவகாசம் வழங்கி எதிர்வரும் 14ஆம் திகதி அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ☞2

## பிரதி சபாநாயகருடன் சஜித் அவசர சந்திப்பு

### நீதிமன்ற உத்தரவு குறித்த விவகாரத்தால்





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதி சபாநாயகர் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 6 பேர் வந்து முதலில் உறுப்பினர் அறையில் அமர்ந்துகொண்டிருந்தனர். கூட்டம் நிறைவெண் போதாமல் ஒத்திவைக்கப்பட்டபின்னர், உள்ளூராட்சி ஆணையாளர் புறப்பட்டுச் சென்றுவிட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு, உறுப்பினர் வருகைப் பதிவேட்டில் கூட்டம் நிறைவுறும் வரை கையெழுத்து வைத்திருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கைக்குக் கீழே ஒரு அடையாளம் இடப்படும் வரை காத்திருந்துவிட்டு நைஸாகப் போய் அந்தப் பதிவேட்டில் கையெழுத்து வைத்துவிட்டுப் பறந்து விட்டார்கள். என்னவொரு ''கடமையுணர்வுள்ள'' "தரமான" மக்கள் பிரதிநிதிகள் இவர்கள்?

இந்தச் சபையின் உறுப்பினர்களில் ஒருவர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர் பேரவையின் முன்னாள் செயலாளர். இராணுவத்தினர் தாக்கும் போதெல்லாம் முன்னாள் நின்று அடிவாங்கி, மண்டை உடைபட்டு உணர்ச்சி வீரனாகத் திகழ்ந்தவர். அப்படிச் சொல்லலாமா என்பது இப்போது சந்தேகம்தான். அதனால் உணர்ச்சி வீரனாக ஊடகங்களில் பிரதிபலிக்கப்பட்டவர் என்று திருத்திக்கொள்கின்றேன். அவர் அரசியலுக்கு வந்ததே இந்த மாதிரி மாணவராக இருந்தபோது காட்டிய அரசியல் ஈடுபாடும் வீரத் தோற்றமும்தான். மாநகர சபையின் எல்லாக் கூட்டங்களிலும் எப்படியாவது எதிரணியினருடன் சண்டையிழுத்து ஊடகங்களுக்குத் தீனிபோட்டுக்கொண்டிருப்பார். கடந்த இரண்டு வரவு செலவுத் திட்டங்களின் போதும் நேற்றைய முதல்வர் தெரிவின்போதும் ஆளை மாநகர சபை எல்லைக்குள்ளேயே காணவில்லை. ஆனல்ட்டை மீண்டும் முதல்வராகத் தெரிவு செய்வதற்கான கூட்டத்திற்கு வந்திருந்தார். கட்சி சொன்னதை மீறி கூட்டத்துக்கு ஏன் போனனி என்று முன்னாள் ஆயுத இயக்கத் தலைவர் விட்டு ஒரு மிரட்டலோட சரி. அதற்குப் பின்னர் ஆள் இந்தப் பக்கமும் இல்லை. ஆனால் ஏரியாவில லைட்டுப் பூட்டுறதெண்டு அழைப்பெடுத்தால் ஆள் ஓடி வருவார். வருங்கால அரசியல் தலைவர்களின் தகுதி, தராதரம் எல்லாம் எப்படி இருக்கிறது என்று அறிந்துகொள்ளுங்கள் மக்களே! இவர்கள்தான் நாளை மாகாண சபைக்கும், நாடாளுமன்றத்துக்கும் வேட்பாளர்களாக உங்களைத் தேடி வருவார்கள்.

...................... ..........

பயங்கரவாதத்தடைச் சட்டத்தாலும் இராணுவத்தாலும் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தபோது வாய்மூடி மௌனிகளாக இருந்தது தென்னிலங்கை. பொலிஸாரும் படையினரும் தமிழ் மக்கள் மீது அராஜகங்களைக் கட்டவிழ்த்துவிட்ட போது அங்கிருந்து அதைக் கண்டித்து பெரிதாக எவரும் குரல் கொடுத்த தில்லை. இன்னும் சொல்லப்போனால் அடிப்பவர்கள் சிங்களவர்களாகவும் அடி வாங்குபவர்கள் தமிழர்களாகவும் இருந்த பட்சத்தில் தெற்கில் இருந்தவர்களுக்கு அது நியாயமாகவும்பட்டது. ஆர்ப்பாட்டம் செய்த தமிழ் மக்களை இராணுவம் கொட்டன்தடிகளுடன் முகத்தை மூடிக்கட்டியவாறு தாக்கிக் 'கலைப்பதற்கு யாழ்ப்பாணத்தில்தான் அச்சாரம் போடப்பட்டது. பயிற்சி எடுக்கப்பட்டது. போராட்டங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறும்நடைமுறையை வடக்கு கிழக்கில் தான் பொலிஸார் முதலில் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார்கள். காலாவதியான கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும்கூட இங்கேதான் அவர்கள் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இப்போது குய்யோ முறையோ என்று கத்தத் தொடங்கியிருக்கிறார்கள் தெற்கில் உள்ளவர்கள். அப்படிக் கத்தினால் என்ன செய்ய வேண்டும், அதை எப்படி அடக்கவேண்டும், ஐ.நாவுக்குப் போனால் அதை எப்படிக் கையாளவேண்டும் என்பதும் சிங்கள அரசுக்கு நன்கு தெரியும். ஏனெனில் அதையும் அவர்கள் தமிழர்களில் ஏற்கனவே பயிற்சி செய்து பார்த்துள்ளார்கள்.

அநீதியை உடனேயே எதிர்க்காவிட்டால், அது அடுத்தவருக்குத்தானே நடக்கிறது என்று பேசாமல் இருந்தால் அது ஒருநாள் எம்மையும் வந்து சேரும் என்பதற்கான சான்று இவை. சிங்களவர்களுக்கு மட்டுமல்லல தமிழர்களுக்கும் இது பொருந்தும். அன்று நாங்கள் வாங்கினோம் அவர்கள் பேசாமல் இருந்தார்கள் என்றுகூறி இன்று நாங்கள் பேசாமல் இருந்தால் நாளை இன்னும் நான்கு மடங்கு அதிகமாக நாமும் இதே அரச இயந்திரத்தால் நசுக்கப்படுவோம்.

இடிமின்னல்

## அடக்குமுறை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்னால் நேற்று ஒன்று கூடிய பொதுச் சமூகங்களின் பிரதிநிதிகள், அமைதிப் போராட்டங்கள் மீது ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறை குறித்து ஐ.நா. கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மக்களாட்சிக்கு அமைய முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல், இரும்புக் கம்பிகள் கொண்டு தாக்குதல், கண்மூடித்தனமான தடியடி, அளவுக்கதிகமான நீர்த்தாரை தாக்குதல் என்பன நடத்தப்படுவது தொடர்பில் ஐ.நா. கவனம் செலுத்தவேண்டும் என்று போராட்டக்காரர்கள் மேலும் வலியுறுத்தினர்.

கொழும்பில் நடந்த இரு ஆர்ப்பாட்டங்களின் போது நடத்தப்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டுத்தாக்குதலால் இருவர் உயிரிழந்தமை தொடர்பில் நீதியை நிலைநாட்ட ஐ.நா. வலியுறுத்தவேண்டும் என்றும் அவர்கள் குரல் எழுப்பினர். கருத்துச் சுதந்திரத்தினை அடக்குவதற்கு எதிராகக் குரல் கொடுக்குமாறும் முழக்கமிட்டனர்.

காலவதியானகண்ணீர்ப் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன, இரசாயனத் தன்மையுடைய கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன என்று எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பா முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

"பல்கலைக்கழக மாணவர்கள் நியாயத்துக்காக வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துகின்றபோது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இரும்புக் கம்பிகள் கொண்டு தாக்கப்படுகின்றனர். இதற்கான உத்தரவுகளை பிறப்பிப்பவர்கள் யார்? இராணுவத்தினரை வைத்து மக்களின் குரல் அடக்கப்படுகின்றது. இதற்கு இடமளிக்க முடியாது'' என்று அங்கு உரையாற்றிய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

''போராட்டத்தில் ஈடுபட்ட இரு சகோதரர்கள் இறந்துள்ளார்கள். போராட்டக்காரர்களைத் தாக்க படையினர் இரும்புக் கம்பிகளை பயன்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் படைத்துறைப்பேச்சாளர் அந்த ஒளிப்படத்தில் உள்ளவர்கள் இராணுவத்தினரா என்று சந்தேகம் வெளியிட்டுள்ளார். பொலிஸார் முன்னிலையில் தான் படையினர் தாக்குதல்களை நடத்தினர். அவர்கள் படையினர் இல்லை என்றால் பொலிஸார் அவர்களை எப்படி அனுமதித்தனர். தொழிற்சங்கங்களின் குரலை நசுக்குவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. இந்த நிலைமை தொடருவதற்கு அனுமதிக்க முடியாது'' என்று அங்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின். .

''அதிகாரத்தில் உள்ள அராஜக ஆட்சி மக்களாட்சியை முறையை மதிக்கவில்லை. சர்வாதிகாரத்தினை மையப்படுத்தியே போராட்டங்களை அடக்குகின்றது. போராட்டங்களில் பங்கேற்றவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அப்படிப் போராட்டக்காரர்களைக் கொலை செய்கின்ற ஆட்சியாளர்களை பதவியிலிருந்து விரடப்படும் வரையில் போராட்டம் தொடரும்'' என்றார் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை ம.சக்திவேல்.

"அமைதியாக முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களின் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்த நிலைமை தொடருவதற்கு இடமளிக்கமுடியாது. தற்போது அமைதியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. அவை தொடர்ந்தும் அடக்கப்பட்டால் வன்முறைகளாக உருவெடுக்கலாம். மக்கள் புரட்சி வெடிக்கும்" என்றார் பொதுச்செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான சுவஸ்திகா அருளிங்கம்.

## காலாவதியான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தயாரிக்கப்பட்ட கண்ணீர்ப்புகை குண்டுகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 முதல் 2019 வரையான காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்ட 40,000 கண்ணீர்ப்புகைக்குண்டுகள் காலாவதியானவை என்பதுடன், 2022ஆம் ஆண்டு ஜுலை 20ஆம் திகதி வரை அவற்றில் 8,265 கண்ணீர்ப்புகைக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

துப்பாக்கிகளுக்கு அருகில் கண்ணீர்ப்புகையை பயன்படுத்தக்கூடாது என்று கண்ணீர்ப்புகை குண்டு தயாரிப்பாளர்கள் அறிவுறுத்தியுள்ள போதிலும், 2022ஆம் ஆண்டில் துப்பாக்கிக்கு அருகிலேயே அதிகளவான கண்ணீர்ப்புகைக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில், கடுமையான நிதி நெருக்கடி காணப்பட்ட 2022 மார்ச் 31 முதல் ஜுலை 20ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பொலிஸார் 84 சந்தர்ப்பங்களில் 6,722 கண்ணீர்ப்புகை குண்டுகளை பயன்படுத்தியுள்ளனர். அதன் பெறுமதி 26 மில்லியன் ரூபாவாகும்.

ஒரே நாளில் அதிக அளவான கண்ணீர்ப்புகை குண்டுகள் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் 2022ஆம் ஆண்டில் பதிவாகியிருக்கிறது. அந்நாளில் 100 குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் குறித்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

## எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாங்கள் பொறுமையாகச் செயற்படவேண்டும். பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையினால் நாம் பெறும் சம்பளம் போதுமானதாக இருக்காதுதான். ஆனால், தற்போதைய நிலைமையில் பொருட்களின் விலைகள் மீண்டும் குறைவடையும்.

எரிபொருள் விலையும் எதிர்வரும் நாட்களில் குறைவடையும். அடுத்ததாக இறக்குமதி செய்யப்படும் எரிபொருள்கள் டொலரின் பெறுமதிக்குஏற்றால்போன்று இறக்கப்படும். அப்போது விலை குறைவடையும். இதன் நன்மை மக்களுக்கு கிடைக்கும். அதேபோன்று எதிர்வரும் ஜுன் மாதமளவில் மின் கட்டணமும் குறைவடையும் என்று மின் சக்தி அமைச்சர் கூறியுள்ளார். நாங்கள் கிரீஸ், ஆஜர்டினா மற்றும் பாகிஸ்தான் நிலைக்குச் செல்லவில்லை. தற்போது டொலர் பெறுமதி குறைவடைகின்றது. பணவீக்கமும் குறைவடையும்.

பொருளாதாரம் தொடர்பில் முன்னெடுத்த வேலைத் திட்டங்களே இதற்கு காரணமாக அமைந்துள்ளன - என்றார்.

## மக்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விகிதத்தையும் அதிகரிக்கும் இந்த அரசிடம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை என்றாலும் தற்போதைய ஜனாதிபதியை நியமித்த 134 பேரின் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகள் அவர்களிடம் இருக்கின்றன.

மொட்டு ராஜபக்சக்களை பாதுகாப்பதே இந்த அரசினதும் ஜனாதிபதியினதும் நோக்கமாக இருப்பதால், இந்த அடக்குமுறை அரசை விரட்ட மக்கள் அணிதிரள வேண்டும்.

மக்கள் பிரச்சினைகளுக்கு அரசிடம் இல்லாத பதில் எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் இருக்கின்றது. இது தொடர்பில் எந்த விவாதமும் தேவையில்லை - என்றார்.

## பிரதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அஜித் ராஜபக் ஷவுக்கும் இடையில் அவசர சந் திப்பு வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இதன்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு உரிய நிதியை விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறத்துள்ளமை தனது சிறப்புரிமையை மீறுவதாக உள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.தொலவத்த தெரிவித்துள்ள கருத்து தொடர்பிலும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் குறித்த விடயம் தொடர்பில் சபையில் எழுப்பிய சிறப்புரிமை பிரச்சினை சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

ஆளும் தரப்பினரின் இவ்வாறான கருத்துக்கள், நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர். அத்துடன் இந்த விடயம் சம்பந்தமாக சபாநாயகர் கவனம் செலுத்தவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

## திங்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறும்.

15ஆம் திகதி, நாடு முழுவதும் உள்ள அனைத்து வைத்திய சாலைகளையும் உள்ளீர்க்கும் வகையில், பணிப்புறக்கணிப்பு இடம்பெறவுள்ளது - என்றார். முன்னதாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதியின் செயலாளருக்கும் இடையில் நடந்த சந்திப்பில் வரிக் கொள்கை தொடர்பில் எந்தவித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. ஜனாதிபதி செயலகத்தில் நடந்த பேச்சு தோல்வி அடைந்ததைத் தொடர்ந்தே தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் சங்கம் அறிவித்துள்ளது.

## செல்வம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தனது உரையில் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவராலயங்கள் மற்றும் உயர் ஆணையரகங்கள் புலமை பரிசில் வழங்கல் திட்டங்களை முன்னெடுக்கின்றன. அவை நாட்டிலுள்ள அனைவருக்குமானவை.

கொழும்பில் உள்ள பாக்கிஸ்தான் உயர்ஆணையரகம் கிழக்கு மாகாணத்தின் ஒரு பிரதேசத்தில் மட்டும் ஆயிரம் பேருக்கு புலமை பரிசில்கள் வழங்கியுள்ளது.

இந்தப் புலமைப் பரிசில்களை வழங்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசுடன் இணையாமலம் முன்னெடுத்துள்ளதன் நோக்கம் என்ன? நாட்டில் மூவின மக்கள் வாழ்கிறார்கள். கிழக்கிலும் மூவின மக்கள் வாழ்கிறார்கள்.

அப்படியிருக்கும்போது ஒரு பிரதேசத்தில் மாத்திரம் புலமைப்பரிசில் வழங்குவது தவறானது. ஆகவே இவ்விடயம் குறித்து அரசு விசேட கவனம் செலுத்த வேண்டும் -என்றார்.

## மாதகலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று கருதப்படும் நபர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்றும் கடற்படை தெரி விக்கின்றது. இவ்வாறு தப்பியோடிய சந்தேக நபர்களை தேடிவருவதோடு கைப்பற்றப்பட்ட கஞ்சா இன்று சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மார்ச் 14 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்தக் காலப்பகுதிக்குள் தங்களின் கோரிக்கைக்கு அரசு உரிய பதிலை வழங்க வேண்டும் எனவும், இல்லையெனில் போராட்டம் நடக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.













காலைக்கதிர் Kalaikkathir

# சுத்தமான குடிதண்ணீரை பெறமுடியாது 450 குடும்பங்கள் வனனியில் அந்தரிப்பு



கடும் வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில் கண்ணகி நகர் கிராமத்தில் 450 குடும்பங்கள் குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் சுத்தமான தண்ணீரைப் பெற முடியாது அந்தரிக்கின்றன.



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டது புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவு. அங்குள்ள உள்ள கண்ணகி நகர் எனும் கிராமத்தில் சுமார் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 450 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

கடல் தொழில் மற்றும் விவசாயமே இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரமாக இருந்து வருகின்றது. கோடை காலங்களில் இந்தக் கிராம மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைப்பது குதிரைக் கொம்பாகி உள்ளது.

“எமது கிணறுகளில் உள்ள தண்ணீரை எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்த முடியாது. தண்ணீர் மஞ்சள் நிறக் காவியாகக் காட்சியளிக்கின்றது. உடுபுடவைகளை அந்தத் தண்ணீரில் கழுவினால்உடனே மஞ்சளாக மாறிவிடுகின்றது. அதிலும் பாடசா லைச் சீருடைகளை இந்தத் தண்ணீரில் கழுவினால் உடனேயே பழுப்பு நிறமாகி விடும். அதுவும் கோடை காலங்களில் நிலமையைச் சொல்லத் தேவையில்லை. பெரும் சிரமம்.

எமது பகுதியில் சுத்தமான தண்ணீர் பெறக்கூடிய வகையில் மூன்று கிணறுகளே உள்ளன. அவையும் தனியார் காணிகளிலேயே அமைந்துள்ளன.

இக் கிணறுகளின் காலை தொடக்கம் மாலை வரை தமது அன்றாட தேவைக்காக நீரை துவிச்சக்கர வண்டியில் இழுப்பதே சிலருக்கு நாளாந்த வேலையாக மாறிவிட்டது

பாடசாலை மாணவர்களின், சிறியவர்கள், முதியவர்கள் என எல்லோரும் குளிப்பதற்கும் ஏனைய தேவைக்களுக்கும் அருகில் உள்ள குளங்களுக்கே செல்லவேண்டியுள்ளது.

வயது முதிர்ந்தவர்கள் இந்த மஞ்சள் காவி நீரினையே பருகியும் தமது நாளாந்த தேவைக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக சிலர் நோய் வாய் பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு சென்ற பொழுது வைத்தியர்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பருகவேண்டும் என ஆலோசனை கூறியுள்ளனர்.

கிராமத்திலோ சுத்தமான குடி தண்ணீரைப் பெறுவது முடியாத காரியமாகியுள்ளது. சில







வருடங்களுக்கு முன்னர் எமது பகுதிக்கு கிராம சேவையாளர் ஊடாக நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது. ஆனால் அது ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை. அது கிடப்பிலேயே கிடக்கின்றது.

சுத்திகரிப்பு இயந்திரத்தை பொருத்துவதற்கான தளம் அமைக்கப்பட்டுள்ளது. வேறு எந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக் கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் எமது பகுதிக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுத்தந்து ஒரு நிரந்தர தீர்வினை பெற்றுதர வேண்டுமென” மக்கள் தெரிவித்தனர்.

## கண்காட்சி

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு ‘பெண்களின் வளர்ச்சி கிராமத்தின் எழுச்சி‘ எனும் தொனிப்பொருளில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதார திட்ட பயனாளிகளின் தயாரிப்புக்களின் கண்காட்சியும், விற்பனையும் வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு கொக்கட் டிச்சோலை பொதுச்சந்தையில் தொடங்கி வைக்கப் பட்டது.



அதிதிகளினால் சந்தை பகுதி திறந்து வைக்கப்பட்டு, உற்பத்திப்பொருள் கண்காட்சியும் விற்பனையும் தொடக்கி வைக்கப்பட்டது.

பாம் பவுன்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர், கொக்கட்டிச் சோலை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி, சிரேஸ்ட பொதுசுகாதார உத்தியோகத்தர் , பொதுசுகாதார பரிசோதகர், பாடசாலை அதிபர்கள், கூட்டுறவுசங்க முகாமையாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், வங்கி முகாமையாளர்கள், மருத்துவ உதவி தாதியர் கொக்கட்டிச்சோலை மக்கள் நல இளைஞர் அமைப்பினர், மாதர் சங்க உறுப்பினர், பாம் பவுன்டேசன் நிறைவேற்றுப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், வாழ்வாதார பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தற்காலிக நிவாரணம் மட்டுமே

**பன்னாட்டு செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) கடன் உதவி அனேகமாக உறுதியாகிவிட்டதனால் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சியாளர்களும் சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். செலாவணி நிதியத்தின் கடன் கிடைத்தால் மேலதிகமாக உலக வங்கி, ஜப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடம் இருந்தும் கடன்களைப் பெற முடியும் நிலமையைச் சமாளிக்க முடியும் பொருளாதாரச் சரிவைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற எதிர்பார்ப்பிலேயே ஆட்சித் தரப்பு மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது.**

**இதே எதிர்பார்ப்பிலேயே அமெரிக்க டொருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பும் உயர்ந்திருக்கின்றது. ரூபாயின் மதிப்புயர்வு நிச்சயம் பொருள்களின் விலைகளில் தாக்கத்தைச் செலுத்தும். அதைக் கண்கூடாகவே பார்க்க முடிகின்றது. டொலர் பெறுமதி இறங்கியவுடனேயே சதோச நிறுவனம் 7 பொருட்களுக்கான விலைகளைக் குறைத்துள்ளது. கோதுமை மாவின் விலை குறைந்துள்ளது. அதனால் வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் குறைந்துள்ளன. குறிப்பாக ஏழை மக்களின் உணவான பாண் விலை குறைந்துள்ளது.**

**டொலர் பெறுமதி குறைந்த நிலையில் வாங்கப்பட்ட பொருள்கள் சந்தையை வந்தடையும்போது ஏனைய பொருள்களின் விலைகளும் குறையும். குறிப்பாக பெற்றோல், டீசல் விலை குறையும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றின் விலை குறையும்போது மின்சாரக் கட்டணமும் குறைந்தாகவேண்டும். அவை குறையும்போது– உள்ளூர் உற்பத்திச் செலவு குறையும், அது மீண்டும் சந்தையில் விலைகளைக் குறைக்கும்.**

**இவையெல்லாம் மக்களுக்கும் மகிழ்ச்சியான செய்திகளாகத்தான் இருக்கும். ஆனால், இந்த நிலமைகளால் பொருளாதார நெருக்கடிக்கு முன்பான பழைய இயல்பு நிலை திரும்பிவிடுமா என்றால், இல்லை என்பதுதான் பதில். இது ஒரு தற்காலிக விடுதலைதான். 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச பதவிக்கு வந்தபோது இருந்த நிலையுடன் பார்க்கும்போது அனைத்துப் பொருட்களின் விலைகளும் சுமார் 3 மடங்கு அதிகரித்திருக்கின்றது. டொலர் விலை குறைவு மற்றும் செலாவணி நிதியக் கடன் என்பவற்றால் விலைகள் நிச்சயம் திரும்பவும் பழைய நிலைக்குப் போகப்போவதில்லை. தற்போதைய உயர் நிலையிலிருந்து அவை சற்றுக் குறையலாமே தவிர, அதுவொரு நிரந்தரத் தீர்வாக அமையாது.**

**அதேநேரம் ஆண்டு இறுதியில் டொலரின் விலை மீண்டும் 390 ரூபாய் வரைக்கும் அதிகரிக்கும் என்கிற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கின்றது. அரசு மீது தொடரும் அழுத்தம் காரணமாக இந்த நிலை ஏற்படும் என்கிற எச்சரிக்கை அது. அரசின் வரி விதிப்புக்கு எதிராகக் கடுமையான போராட்டங்கள் வலுத்து வருவதால் ஒரு கட்டத்தில் ஆட்சியாளர்கள் பின்வாங்க வேண்டியவர்களாக இருப்பார்கள். அத்துடன் தேர்தல்கள் அடுத்தடுத்து நடத்தப்படவேண்டியிருக்கின்றன. இவற்றின் காரணமாக டொலருக்கு எதிரான தனது மதிப்பை ரூபாய் தொடர்ந்தும் தக்க வைக்காது என்று பொருளாதார வல்லுநர்கள் கணிக்கின்றனர்.**

**அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் இப்போது காணப்படுவது ஒரு தற்காலிக விடுதலை மட்டுமே. முழுமையான பொருளாதார மீட்சி அல்ல என்பது புலப்படும். இதில் மகிழ்வதற்கோ நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கோ ஒன்றுமில்லை. முழுமையான பொருளாதார மீட்சியை நோக்கிய சரியான திட்டங்கள் வகுக்கப்பட்டு, விட்டுக்கொடுக்காத தன்மையுடனான நீண்ட காலக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அதுவே மக்களுக்கு நிரந்தர நன்மையளிப்பதாக இருக்கும்.**

# வீதிப்போராட்டத்தால் ஆட்சிமாற்றம் வராது: நாட்டின் பொருளாதாரமே சீர் குலையுமாம்!

## சாந்த பண்டார கருத்து



நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தில் சகல தரப்பினரும் இணைந்து கொள்ளவேண்டும். வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப நாட்டு மக்கள் உட்பட அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

வீதி போராட்டங்களால் ஆட்சியை மாற்ற முடியாது. மாறாக, நாட்டின் பொருளாதாரமே சீர் குலையும் என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் தற்போது எமக்கு உள்ள பொறுப்பு வங்குரோத்து அடைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகும்.

அதற்கானதொரு அடித்தளத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார். அதற்கேற்பவே வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் அதன் பிரதிபலன்கள் தற்போது அடையப்பெற்று வருகின்றன.

நாட்டில் தற்போது அரச செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரச வருமானங்கள் அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இறக்குமதிகள் இயலுமானவரை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்றுமதி வருமானங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த ஜனவரி மாதம் மாத்திரம் ஒரு கோடி டொலர் ஏற்றுமதி மூலம் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

எதிர்காலத்திலும் ஏற்றுமதிகளை அதிகரித்து இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி வருமானங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, அரச சேவைகளுக்கு புதிய நியமனங்கள் வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை உள்ளது. மின்சார கட்டணங்கள் உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வரிக்கொள்கைகள் தொடர்பிலும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அதில் சில குறைகள் காணப்பட்ட போதிலும் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டு அதன்பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவோம். அதுவரையில் சற்று பொறுத்திருக்க வேண்டும்.

அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான், பாரிஸ் கிளப் நாடுகளின் உதவிகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியும் கிடைக்கவுள்ளது. குறிப்பாக சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது. நாம் முன்னர் இருந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு மீட்சி நிலையை நோக்கி செல்கிறோம்.

இது தனி நபர் ஒருவரால் பெறப்பட்ட வெற்றியல்ல. நாட்டு மக்கள் என்ற வகையில் நாம் அனைவரும் பெற்ற வெற்றியாகும். இருப்பினும் நாம் வெற்றியின் இறுதிப் பகுதிக்கு செல்லாத போதிலும், அதற்கான ஆரம்பமாக இதைக் குறிப்பிடலாம்.

நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது. நாம் ஒன்றாக முன்னோக்கி செல்லவில்லை என்றால் மீண்டும் ஆரம்ப இடமான வங்குரோத்து நிலைக்கே செல்ல வேண்டி ஏற்படும்.

இந்நிலையில், மீண்டெழும் பொருளாதாரத்தைச் சீர் குலைக்கும் விதமாக வீதிகளில் இறங்கியும், வீதிகளை மறித்தும் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டாம். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும். சுற்றுலாப் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். அவர்களின் வருகை குறைவடையும்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கவில்லை என்றாலும் பறவாயில்லை. இவ்வாறானதொரு தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம். ஜனாதிபதி முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்களை நிறைவேற்ற குறைந்தது இன்னும் ஒரு வருடத்தையேனும் வழங்குங்கள். மேற்படி காலப்பகுதிக்குள் நெருக்கடிகளை இல்லாது செய்து பழைய நிலைக்கு நாட்டை கொண்டு செல்லலாம். - என்றார்.

# இலங்கையில் 63 லட்சம் மக்களுக்கு கடுமையான உணவுப் பற்றாக்குறை!

இலங்கையில் 28 சதவீதம் அல்லது 63 லட்சம் மக்கள் கடுமையான உணவுப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

அண்மையில் டுபாயில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மேலும், 2022 ஆம் ஆண்டில் குறைந்து வரும் உணவு உற்பத்தி மற்றும் பணவீக்கம் காரணமாக, இலங்கையின் மொத்த சனத்தொகையில் 59 சதவீதமான குடும்பங்கள் தேவையான உணவைப் பூர்த்தி செய்ய இயலவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சந்தர்ப்பவாத அரசியலைவிடுத்து, நாட்டைமீட்க எதிரணிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

## அமைச்சர் ஜீவன் அழைப்பு



ஜனநாயகம் எனக் கூறிக்கொண்டு, ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சியிலும் நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கிலும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அவ்வாறான நடவடிக்கைகள் எமது நாட்டுக்கே பாதிப்பாக அமையும். எனவே, சந்தர்ப்பவாத அரசியலை விடுத்து, நாட்டை மீட்க எதிரணிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார்.

வெற்றிபெற்றவரையும், முயற்சித்து தோல்வி அடைந்தவர்களையுமே வரலாறு நினைவில் வைத்திருக்கும். மாறாக வேடிக்கை பார்ப்பவர்களுக்கு வரலாற்றில் இடமில்லை. நாளை ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால்கூட அதில் தற்போதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறுவார் எனவும் அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டில் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டது. மின்வெட்டு அமுலானது. வரிசை யுகம் ஏற்பட்டது. உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் 100 வீதத்தை தாண்டிச்சென்றது. இவற்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவு கட்டியுள்ளார். அதற்காக அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நாடு இவ்வாறு நெருக்கடி நிலையிலிருந்து மீளும்போது, எதிர்க்கட்சிகள் அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

1991 ஆம் ஆண்டளவில் இந்தியாவிலும் இதேபோன்றதொரு நிலைமை ஏற்பட்டது. ஆனால் நாட்டை மீட்பதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தன. மக்களுக்கு சேவை செய்தன. இதனால் தான் இந்தியா இன்று 5 ஆவது மிகப்பெரிய பொருளாதார நாடாக மாறியுள்ளது. எனினும், எமது நாட்டில் உள்ள அரசியல் தலைவர்களுக்கு இந்தமனநிலை இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

பொருளாதார ஸ்தீரத்தை மறந்து, அரசியலுக்காக மக்களை திருப்திப்படுத்தும் வகையில் வரிக்கொள்கைகள் கொண்டுவரப்பட்டதாலேயே நாட்டுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டளவில் இலங்கையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில்கூட ஏற்றுமதி 40 வீதமாக இருந்துள்ளது. தற்போது போர்கூட இல்லை. ஆனால் ஏற்றுமதி 20 வீதமாகவே உள்ளது. முறையற்ற சில சட்ட ஏற்பாடுகளும் பின்னடைவுக்கு காரணங்களாக அமைகின்றன. கடன் வாங்கியே நாடு நடத்தப்பட்டுள்ளதுடன், சொந்தகாலில் நிற்பது பற்றி சிந்திக்கப்படவில்லை. சிபேட்கோ நிறுவனம் பாரிய நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மின்சார சபையும் இதே வழியில் தான் பயணித்துக்கொண்டிருக்கின்றது. வாங்கப்படும் கடன்களில் இவற்றுக்குதான் உயிர்கொடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இதற்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

எமது நாட்டு ஜனாதிபதி தற்போது வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளார். செல்வந்தர்கள் மீதே வரிச்சுமை திணிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான சமுர்த்தி திட்டமும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியானவர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே சமுர்த்தி பட்டியல் மீளாய்வு செய்யப்படுகின்றது. எனவே, மலையக மக்களும் இதற்கு கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும்.

அதேவேளை, உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு 1600 கோடி ரூபா செலவாகும். அத்தேர்தலால் ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது அமைச்சரவையோ மாறப்போவதில்லை. பொருளாதாரப் பிரச்சினைகளும் தீரப்போவதில்லை. நாம் ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் அல்லர். நாளை ஜனாதிபதி தேர்தலொன்று நடத்தப்பட்டால்கூட அதில் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறுவார். என்றார்.

# 'டைனமைட்' வெடி பொருளுடன் மன்னாரில் இருவர் கைதாகினர்!



மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிமுனை கடற்கரை பகுதியில் வைத்து ஒரு தொகுதி 'டைனமைட்' வெடிபொருட்களுடன் 2 சந்தேக நபர்கள் வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் 200 'டைனமைட்' மற்றும் அதற்கு பயன்படும் 160 அடி நூல் மற்றும் ஏற்றி வைத்து இருந்த பட்டா வாகனம் என்பன வியாழக்கிழமை மாலை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் துல்சான் நாகாவத்தவின் பணிப்பில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகேயின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு தற்காலிக பொறுப்பதிகாரி உ.பொ.ப.ஜெயவர்த்தன பொ.சா . ரத்னமணல தலைமையிலான அணியினரே மேற்படி டைனமைட் வெடி பொருள்களை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நாரம்பன பகுதியை சேர்ந்த 35, 54 வயதுடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

மேற்படி கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள்கள் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

# பாதுகாப்பு அமைச்சின் இணையம் உட்பட இரு இணையத்தளங்களுக்குள் ஊடுருவல்!

## முக்கிய தகவல்கள் பறிபோயுள்ளனவாம்

அரசாங்கத்தின் இரண்டு இணையத்தளங்கள் ஹக்செய்யப்பட்டுள்ளன எனவும் மிக முக்கியமான தகவல்கள் பறிபோயுள்ளன எனவும்தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை அரசாங்கத்தின் இரண்டு இணையத்தளங்கள் ஹக் செய்யப்பட்டு அதில் உள்ள மிகவும் இரகசியமான தகவல்கள் ஹக்கர்கள் குழுவொன்றிடம் வழங்கப்பட்டுள்ளதாக சைபர் ஆபத்து தொடர்பான புலனாய்வு அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம்ஹக்செய்யப்பட்டுஅதில்காணப்பட்டவிவரங்கள்ஹக்கர்குழுவொன்றுக்கு விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ளதாக பல்கொன் பீட்ஸ் தெரிவித்துள்ளது.

தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் உட்பட தனிப்பட்ட ரீதியில் அடையாளம் காணப்படக்கூடிய தகவல்கள் விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும்தகவல்கள் வெளியாகியுள்ளன.தரவு முகவர் கெவின் செக்கியுரிட்டி என்ற குழுவே இதனைச் செய்துள்ளது. ஹக்கர் குழு எனதன்னை அழைத்துக் கொள்ளும் இந்தக் குழுவினர், கொலம்பியா, மெக்சிக்கோ, சிலி ஆகிய நாடுகளில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.எனினும் இது தொடர்பாக டெய்லிமிரர் தொடர்பு கொண்டவேளை பாதுகாப்பு அமைச்சின் ஊடக பேச்சாளர் நளின் ஹேரத் இதனை நிராகரித்துள்ளதுடன் எந்த தகவல்களும் பறிபோகவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இணையத்தளத்தின் எந்த தரவும் விற்பனைக்காக வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம்ஹக்செய்யப்படுவதாக எங்களுக்கு ஆரம்பத்தில் தகவல் கிடைத்தது எனக் குறிப்பிட்டுள்ள அவர், அமெரிக்க தூதரகம் எங்களுக்கு இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்தது. இதன் காரணமாக நாங்கள் மிகவும் கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். இதன் காரணமாக எவராலும் அதற்குள் ஊடுருவ முடியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.பாதுகாப்பு அமைச்சு கணிணிஅவசரநிலைதயார்குழுமற்றும் விமானப்படையின் சைபர் நடவடிக்கை நிலையம் ஆகியவற்றின் உதவியுடன் இதனை முறியடித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரோஹித ராஜபக்ஷவின் கடன் அட்டை மாயம்!

## அதனை பயன்படுத்தி மோசடி



மஹிந்த ராஜபக்ஷவின் மகன் ரோஹித ராஜபக்ஷவின் கடன் அட்டை காணாமல்போயுள்ளதாகவும் அதனை பயன்படுத்தி 400 அமெரிக்க டொலர் வரை மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் நாரஹேன்பிட்டிய பொலிஸார் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளனர்.

நபர் ஒருவர் ரோஹிதராஜபக்ஷவின் கடன் அட்டையை பயன்படுத்தி நான்கு பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மார்ச் 3 ஆம் திகதி, தான் தனது கடன் அட்டையை தொலைத்துவிட்டதாகவும் ரோஹித ராஜபக்ஷ முறைப்பாடு செய்துள்ளார்.

# மக்கள் ஆயுதங்களைக் கையிலெடுப்பர் உதயகம்மன்பில அரசுக்கு எச்சரிக்கை!



அரசாங்கத்தின்மீதுநாட்டு மக்கள் கடும் கோபத்தில் உள்ளார்கள் ஜனநாயக ரீதியில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த மக்களுக்கு இடமளிக்காவிட்டால் வாக்குச்சீட்டுக்கு பதிலாக மக்கள் ஆயுதத்தைக் கையில் எடுப்பார்கள் என்பதை ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பினர் நினைவில்வைத்துக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். நிதி விடுவிப்பு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு, திறைசேரியின் செயலாளருக்கும் இடையில் இடம்பெறவிருந்த பேச்சுகளுக்கு ஜனாதிபதியே தடையேற்படுத்தியுள்ளார்.

நிதி விடுவிப்பு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரியின் செயலாளரை ஆணைக்குழுவுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்த போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பு சபையைக் கூட்டி அதற்கு திறைசேரியின் செயலாளரை அழைத்துள்ளார். ஜனாதிபதியின் செயற்பாடுகள் முறையற்றனவாக உள்ளன.

தேர்தலை பிற்போடுவது தமக்கு சாதகமாக அமையும் என அரசாங்கம் கருதுமாயின் அது அரசாங்கத்துக்கே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, 1975 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை 2 ஆண்டுக்கு பிற்போட்டார், இதனை தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வி அடைந்தது, சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் 8 ஆசனங்களை மாத்திரம் கைப்பற்றியது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, நாடாளுமன்ற பெரும்பான்மையை தக்கவைத்துக் கொள்வதற்காக பொதுத் தேர்தலை பிற்போட்டதால் வடக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராட்டமும், தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டமும் தோற்றம் பெற்று நாட்டில் இரத்த வெள்ளம் ஓடியது.

நல்லாட்சி அரசாங்கம் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுன மாகாணசபைத் தேர்தலில் அமோக வெற்றிப் பெறும் என்பதை நன்கு அறிந்து திட்டமிட்ட வகையில் மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டது, பெறுபேறு 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி அடைந்து ஒரு தேசிய பட்டியல் ஆசனம் மாத்திரம் அந்தக் கட்சிக்கு மிகுதியானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது மாமனாரான ஜே.ஆர் ஜயவர்தனவின் கொள்கையைப் பின்பற்றுகிறார். ஜே.ஆர். ஜயவர்தனவின் இறுதி அரசியல் காலம் எவ்வாறு அமைந்தது என்பதை அவர் மீட்டு பார்த்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் மீது நாட்டுமக்கள் கடும் கோபத்தில் உள்ளார்கள். ஜனநாயக ரீதியில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த மக்களுக்கு இடமளிக்காவிட்டால் வாக்குச் சீட்டுக்குப் பதிலாக மக்கள் ஆயுதத்தை கையில் எடுப்பார்கள். அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பினர் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். - என்றார்.




# நாமல், சமலுக்கு புதிய பதவிகள்!

## நன்றி தெரிவித்து நாமல் ருவீட்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான, நாமல் ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு புதிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

"புதிய நியமனம் கிடைத்தமை பெருமையாக உள்ளது'' என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சமல்ராஜபக்ஷ ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**உரலார் கேள்வி:-**
சுருக்கமாகப் பதில்கள் சொல்ல முயற்சித்துப் பாருங்களேன்?
**உலக்கையார் பதில் :-**
'ம்'
**சல்லடையாரின் சலிப்பு :- றொம்பத்தான் சுருக்கம் போங்கோ!**

**உரலார் கேள்வி:-**
வாழ்க்கையில் வெற்றிபெற என்ன வழி?
**உலக்கையார் பதில் :-**
முதலில் தோற்காமல் பார்த்;துக் கொள்ளுங்கள்.
**சல்லடையாரின் சலிப்பு :- அதற்கு என்ன வழியாம்?**

**உரலார் கேள்வி:-**
உண்மையிலேயே பெண்களைவிட ஆண்கள் பலசாலிகள் தானா?
**உலக்கையார் பதில் :-**
உடலளவில்; மட்டும்.
**சல்லடையாரின் சலிப்பு :- இது இவருக்கு எப்படித் தெரியுமாம்?**

**உரலார் கேள்வி:-**
அவுஸ்திரேலியப் பயணம் எப்படி இருந்தது?
**உலக்கையார் பதில் :-**
கங்காருநாட்டில் கம்பன் - களித்தேன்!
**சல்லடையாரின் சலிப்பு :- களிப்பு இவருக்கு மட்டுமோ அவையளுக்குமோ?**

**உரலார் கேள்வி:-**
தமிழினத்திற்குத் தலைமை தாங்க நல்லவன் ஒருவன் தேவையா? வல்லவன் ஒருவன் தேவையா?
**உலக்கையார் பதில் :-**
வல்லவனான நல்லவன் ஒருவன்தான் தேவை.
**சல்லடையாரின் சலிப்பு :- அப்படி ஒருவன் இனித் தான் பிறக்கவேணும் பாருங்கோ.**

**உரலார் கேள்வி:-**
சைவசித்தாந்தத்தைச் சுருக்கமாய் விளங்கப்படுத் துங்கள் பார்க்கலாம்?
**உலக்கையார் பதில் :-**
ஆண்டவனைக் காட்டமுனையும் அறிவுக் கண் ணாடி.
**சல்லடையாரின் சலிப்பு :- ஆரும் கண்டவையளாமே?**

**உரலார் கேள்வி:-**
உங்களது கிளிநொச்சித் திட்ட முயற்சிக்கு அவுஸ்தி ரேலியா கைகொடுத்ததா?
**உலக்கையார் பதில் :-**
சிலர் கைநிறையக் கொடுத்தார்கள். வேறு சிலர் கைமட்டும் கொடுத்;தார்கள்.
**சல்லடையாரின் சலிப்பு :- இந்த மனிசனிண்ட 'குசும்பு' விடாது.**

**உரலார் கேள்வி:-**
விமானத்தில் பறக்கும்போது எதை நினைப்பீர்கள்?
**உலக்கையார் பதில் :-**
கடலின் ஆழத்தை!
**சல்லடையாரின் சலிப்பு :- 'அச்சந்தவிர்!' ஹி.. ஹி..**

**உரலார் கேள்வி:-**
அவுஸ்திரேலியத் தமிழர்கள் இன்னும் இலக் கியங்களை ரசிக்கிறார்களா?
**உலக்கையார் பதில் :-**
நிறைய!
**சல்லடையாரின் சலிப்பு :- சுருக்கம் கூடிப் போச்சுங்கோ.**

**உரலார் கேள்வி:-**
மீண்டும் மெல்லமெல்ல எழுகின்ற மக்கள் போராட்டத்தை ரணில் சமாளிப்பாரா?
**உலக்கையார் பதில் :-**
'புத்திமான் பலவான்.'
**சல்லடையாரின் சலிப்பு :- கள்ள புத்திமான்?**

**உரலார் கேள்வி:-**
யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சிபற்றி?
**உலக்கையார் பதில் :-**
அதில் ஒன்றும் குறைவில்லை. அறிவு வளர்ச்சி தான் ஆட்டம் காண்கிறது.
**சல்லடையாரின் சலிப்பு :- பதிலைப் பல்கலைக் கழகம் பதிவுசெய்யட்டும்;.**

**உரலார் கேள்வி:-**
பாராளுமன்றத்தில் சண்டைபிடிப்பதற்கென்றே சாணக்கியனை வைத்திருக்கிறார்களா?
**உலக்கையார் பதில் :-**
'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு'
**சல்லடையாரின் சலிப்பு :- உண்மைதானுங்கோ.**

**உரலார் கேள்வி:-**
மீண்டும் ஆனோல்ட் பதவி இழந்தது பற்றி?
**உலக்கையார் பதில் :-**
மேயர் பதவிதான் வேதாளம். ஆனோல்ட்தான் விக்கிரமாதித்தன்.
**சல்லடையாரின் சலிப்பு :- அப்ப ஒருநாளும் வேதாளம் இவரின் கைப்படாதோ?**

**உரலார் கேள்வி:-**
தமிழ்த்தலைவர்கள் என்றைக்கு ஒன்றுபடு வார்கள்?
**உலக்கையார் பதில் :-**
நீங்கள் வேறு சும்மா பகிடிவிடாதீர்கள்.
**சல்லடையாரின் சலிப்பு :- 'தனியே அவர்க்கோர் குணமுண்டு'**

**உரலார் கேள்வி:-**
டொலரின் மதிப்புக் குறையத் தொடங்கிவிட்ட தாமே?
**உலக்கையார் பதில் :-**
வெளிநாடுகளிலிருந்து டொலர்களைப் பெற்றுக் கொள்வோர் அதுபற்றிக் கவலைப்படட்டும்.
எனக்கு இலங்கை ரூபாவின் மதிப்புக் கூடினால்த் தான் மகிழ்ச்சி.
**சல்லடையாரின் சலிப்பு :- போன இடத்தில ஒண்டும் கிடைக்கேலையோ?**

**உரலார் கேள்வி:-**
உக்ரெயின் போரில் அமெரிக்கா, ரஷ்யா எவர் வெல்வார்கள்?
**உலக்கையார் பதில் :-**
அமெரிக்கா நிழல் யுத்தம் செய்கிறது. ரஷ்யா நேர் யுத்தம் செய்கிறது.
இவர்களின் வெற்றி அல்ல பிரச்சினை. உலகம் வெல்ல வேண்டும்.
**சல்லடையாரின் சலிப்பு :- வெல்லுமா?**

**உரலார் கேள்வி:-**
தமிழ்நாட்டு பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் அண்ணாமலை, தான் ஒரு தலைவன் என்று தன்னைத்தான் புகழ்ந்திருக்கிறாரே?
**உலக்கையார் பதில் :-**
நீங்களே தலைவர் என்கிறீர்கள். அவர் சொன் னால் என்னவாம்?
**சல்லடையாரின் சலிப்பு :- அண்ணாமலையார் சொன்னால்ச் சரிதான்.**

**உரலார் கேள்வி:-**
Youtube இன் வருகையால் வானொலி, தொலைக்காட்சிகளின் முக்கியத்துவம் குறைந்து கொண்டே வருகிறதே?
**உலக்கையார் பதில் :-**
அவை மட்டுமல்ல. இன்னும் பத்தாண்டுகளுக் குள் பத்திரிகைகளும்கூட, செத்துவிடும்.
**சல்லடையாரின் சலிப்பு :- வாரிதியார் அருள்வாக்குக் கூறுகிறார்.**

**உரலார் கேள்வி:-**
சைவத்தைக் காக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்?
**உலக்கையார் பதில் :-**
இதுகாலம் வரை நீங்களா காத்தீர்கள்?
**சல்லடையாரின் சலிப்பு :- குடுங்கோ ஒரு அப்பளாஸ்.**

**உரலார் கேள்வி:-**
உங்களது நீளமான பதிலும் ஆழமாக இருக்கின் றன.
**உலக்கையார் பதில் :-**
நாசமாய்ப் போச்சு. இப்படி மாறிமாறிச் சொன்னால் நான் என்ன செய்வதாம்? அடுத்த வாரம் நீட்டப் பார்க்கிறேன்.
**சல்லடையாரின் சலிப்பு :- 'மழுப்பலும் நீட்டலும் வேண்டா!'**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Pannor & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Ceramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## அடக்குமுறை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர்நாயகம்சமன் ஸ்ரீரத்நாயக்கவெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மார்ச் 9ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தஉள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக 3 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இதற்காக பணியாற்றும் இடங்களில் அவர்களுக்குச் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டது.

அரசஉத்தியோகத்தர்கள் அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக்குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், வாக்கெடுப்பு இடம்பெற்று முடிவுகள் வெளியிடப்படும் வரை அவர்களுக்குச் சம்பளமற்றவிடுமுறைவழங்கப்படவேண்டும்.

ஆனால், மார்ச் 9ஆம் திகதி திட்டமிடப்பட்ட தேர்தல் தவிர்க்க முடியாத, எதிர்பாராத காரணிகளால் ஏப்ரல் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரச உத்தியோகத்தர்கள் இவ்வாறு நீண்ட காலம் சம்பளமற்ற விடுமுறையில் இருப்பது பெரும் பாதிப்பாகும். அதனால் அவர்களுக்கு ஏதேனுமொரு வகையில் சலுகைகளை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அரசியலமைப்பின் 102 ஆவது உறுப்புரைக்கமைய தேர்தல் நிறைவடையும் வரை அவர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள். அதற்கமைய மார்ச் 9ஆம் திகதியிலிருந்து தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள தினம் வரை குறித்த அரச உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச்சம்பளத்தைமாத்திரம் வழங்குவது பொருத்தமானதுஎனதேர்தல்ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆணைக்குழுவின் இந்தப்பரிந்துரைக்குஅமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரி பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குஎழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது

## ரணிலின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆணைக்குழுவின்தலைவர் நிமல் புஞ்சிஹேவாவினால் மார்ச் 7ஆம் திகதி நிதியமைச்சின்செயலாளர்மஹிந்த சிறிவர்த்தனவுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அந்தக் கடிதத்திற்கு வழங்ககிய பதில் கடிதத்திலேயே நிதி அமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டுஉள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு நிதி வழங்குவதற்கு நிதிச் செயலாளரின் அனுமதியே போதுமானது என்றுநிதியமைச்சின்செயலாளர் எமக்கு முன்னர் அறிவித்திருந்திருந்தார். எனினும், தற்போதைய கடிதத்தில் நிதியை விடுவிப்பதற்கான அனுமதியை நிதி அமைச்சரிடம் கோரியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் அவருடைய கடிதம் நம்பிக்கை அளிக்கின்றது. தேர்தலுக்கு தேவையான நிதி, உரியகாலத்தில்வழங்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்" என்றுநிதி அமைச்சுச்செயலாளரின் கடிதம் குறித்துத் தெரிவித்தார் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர்.


இதேவேளை, தேர்தல் நடத்தப்படும் காலத்திற்கு தேவையான வாக்கு சீட்டுக்களை வழங்குவதற்கும், அரச அச்சகத்திற்கான பாதுகாப்பினை வழங்குவதற்கும், எரிபொருட்களை வழங்குவதற்கும் அவற்றுடன்தொடர்புடையபொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது இணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்என்றும்ஆகவே தேர்தலைஅறிவித்ததிகதியில் முன்னெடுக்கமுடியும்என்றும் ஆணைக்குழுத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக,உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காக 2023ஆம் ஆண்டு வரவு, செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட எந்தவொரு நிதியையும் மறிப்பதைத் தடுக்கும் வகையில் உயர்நீதிமன்றம்மார்ச்3ஆம் திகதிநாட்டின்நிதிச்செயலாளர் மற்றும் நிதி அமைச்சரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டமாஅதிபர் ஆகியோருக்கு இடைக்காலஉத்தரவுபிறப்பித்திருந்தது.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து மார்ச் 9ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சித்தேர்தல்ஏப்ரல்25ஆம் திகதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

## ஒரே நாள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மூடைகளைக் காணோம். அவை இருந்த இடத்தில் பிய்த்து எறியப்பட்ட சாக்குகள் காணப்பட்டன. பெருமளவு



நெல்நிலத்தில்சிதறிக்கிடந்தது.


அந்த இடத்தைச் சுற்றி யானைகளின் காலத் தடங்கள் இருந்தன. அதைப் பார்த்தபோதுதான் பெரும் யானைக்கூட்டம்ஒன்றுவந்து நெல் மூடைகள் அனைத்தையும் கபளீகரம் செய்துவிட்டுப்போயிருப்பதுபுரிந்தது. உரிமையாளர்களும்வேலையாட்களும் அதிர்ந்து போயினர். 4 மாதங்களுக்கு மேலாகப் பாடுபட்டு விளைவித்த நெல்ஒரே இரவில் மாயமாகிப் போனமை அவர்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது.

60க்கும் மேற்பட்ட யானைகள் வந்திருக்கும் போலுள்ளது. அதனால்தான் அவற்றால் 350 மூடைகளையும் சில மணி நேரத்தில் கபளீகரம் செய்ய முடிந்திருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கமநல உத்தியோகத்தர் மா.சிதம்பரநாதன் மற்றும் அதிகாரிகளுக்கு சம்பவம் தொடர்பில்முறையிடப்பட்டது.

மாவட்டப் பேரிடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் காலையில் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று அங்கு நடந்தவற்றை விசாரித்தார்.

அறுவடை நடைபெறும் வேளையில் வனவிலங்கு அதிகாரிகள் வந்து காட்டு



விலங்குகளிடம் இருந்து விவசாயிகளுக்கும்உற்பத்திப் பொருள்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

# தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தன்னிச்சையாக செயற்படமுடியாது!

### சானக வகும்பர தெரிவிப்பு



என்பதால் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தன்னிச்சையாக செயற்பட முடியாது. அரசாங்கத்துடன் எவ்வித பேச்சுகளையும் முன்னெடுக்காமல் அவர்கள்தீர்மானங்களைஅறிவிக்கிறார்கள்.

ஏப்ரல் 25 தேர்தல் இடம்பெற்றாலும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து தான் ஆரம்பமாகும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சானக வகும்பர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில்தற்போது கருத்துரைக்கும் எதிர்தரப்பினர்தான் 2018 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலைக் காலவரையறையின்றி பிற்போடுவதற்குத் துணை சென்றார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்த தேர்தலையும் பிற்போடவில்லை,தேர்தலில் தோல்வியடையும் சூழல் காணப்பட்டபோதும்அவர் தேர்தலை நடத்தி மக்களாணைக்கு மதிப்பளித்தார்.

ஜனாதிபதியின் பதவி காலத்தை எதிர்தரப்பினர் சவாலுக்கு உட்படுத்துகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் அல்லர். அவர் நாடாளுமன்றத்தின் 134 உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டவர். ஆகவே அவர் எவ்வாறு நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்த முடியும் எனக் குறிப்பிடுகிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொலை செய்யப்பட்டதை தொடர்பில் டி.பி. விஜேதுங்க நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்காலஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார், அவர் நிறைவேற்றுத்துறை அதிகாரத்தை பயன்படுத்தி யுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்தார், ஆகவே ஜனாதிபதி பதவி விவகாரத்தில் மக்களால் தெரிவு, நாடாளுமன்ற தெரிவு என வேறுபாடுகள் கிடையா. - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2023இல் வெளியிடப்பெற்றது.